(ஆ) நாகப்பட்டினம் இந்திய எஃகு உருட்டு உருளை ஆலைக் கதவடைப்பு முயற்சியும், தொழிலாளர் பிரச்சினையும்

திரு. வி. கே. கோதண்டராமன் : தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினத்தில் ஸ்டீல் ரோலிங் தொழிற்சாலையில் வேலைசெய்யும் தொழிலாளர்களை சம்பளம் குறைத்துக்கொள்ளும்படியும், வேலைப் பளுவை ஏற்றுக்கொள்ளும்படியும் நிர்ப்பந்தம் செய்வதும் அப்படி ஏற்காவிட்டால் கதவடைப்பு செய்யப்போவதாக சொல்வது பற்றிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

*** மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நாகப்பட்டினத்திலுள்ள இந்திய எஃகு உருட்டு உருளை ஆலையின் நிர்வாகத்தினர், 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் விதித்துறைகளின்படி, 1968, டிசம்பர், 31-ம் நாள் முதற்கொண்டு தங்கள் தொழிற்சாலையை மூடிவிடும் எண்ணத்தைத் தெரிவித்து அறிவிப்புக் கொடுத்தனர். எஃகுக் கட்டைகள் பெற இயலாத நிலைமையாலும், இம்மாநிலத்திலுள்ள மற்ற எஃகு உருட்டு உருளை ஆலைகளின் பெரும் போட்டியினாலும், உற்பத்திச் செலவுகள் மிகவுயர்ந்திருப்பதனாலும் பெரும் இழப்பு ஏற்படுவதனாலும் தங்கள் தொழிற்சாலையை மூடிவிடுவதாகத் தெரிவித்தனர். 600 தொழிலாளர்களுக்கு மேல் வேலையில்லாமல் துன்புறுவர் என்பதால், இச்சிக்கலில் தலையிட்டு அந்த ஆலையை மூட வேண்டாமென்று அந்த நிர்வாகத்திற்கு அரசாங்கம் அறிவுரை கூறுமாறு நாகப்பட்டினத்திலுள்ள நாகப்பட்டினம் எஃகு உருட்டு உருளை ஆலைத் தொழிலாளர் சங்கம் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டது.

2. அடுத்து, 22-12-1968-ல் 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ், அந்த ஆலை நிர்வாகத்திற்கும் நகப்பட்டினம் எஃகு உருட்டு உருளை ஆலைத் தொழிலாளர் சங்கத்திற்கும் இடையே தீர்வு காணப்பட்டது. சென்னைத் தொழிலாளர் துறை தனித்துணை ஆணையாளர் முன்னிலையில் இத் தீர்வு ஏற்பட்டது. இதன்படி அந்த நிர்வாகத்தினர் தற்காலிகமாக தொழிற்சாலை மூடப்படும் அறிவிப்பை ரத்து செய்தனர்.

3. எஃகுக் கட்டைகள் பெறுவதில் ஆலைகளுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாட்டின் காரணமாக, நாகப்பட்டினம், இந்திய எஃகு உருட்டு உருளை ஆலைக்கு மாதம் ஒன்றுக்கு மூன்றுயிரம் டன் எஃகுக் கட்டைகளைத் தவறாமல் வழங்குமாறு இரும்பு, எஃகுக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு இந்திய அரசு தேவையான கட்டளைகளைப் பிறப்பிக்க வேண்டுமென்று இம் மாநில அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : உண்மையில் எஃகுக் கட்டைகள் வாங்க முடியவில்லை என்பதல்ல பிரச்சினை. அந்தத் தொழிலாளர்களின் சம்பளத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும். அவர்களுடைய பஞ்சப் படியைக் குறைத்துக் கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில்தான் உடன்பாடு ஏற்பட்டு ஓரளவிற்குப் பஞ்சப் படியைக் குறைத்துக் கொண்டதற்குப் பிறகுதான் ஒரு உடன்பாடு காண முடிந்தது. அதேபோல் அந்தத் தொழிலாளர்களுக்கு சில சலுகைகள் செய்ய வேண்டும் என்பதும் அந்த உடன்பாட்டில் உண்டு. பஞ்சப் படியைக் குறைத்துச் சம்பளம் கொடுக்கக் கூடிய அளவிற்குத்தான் அந்த முதலாளிகள் முன்னுக்கு வந்தார்களே யொழிய அவர்களுக்குச் செய்யவேண்டிய சலுகைகளை நடைமுறைக்குக் கொண்டு வராத காரணத்தினால் அவர்கள் மீண்டும் வேலைநிறுத்த நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்களென்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதேபோன்று . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புதிதான கருத்துக்களைச் சொல்லி விடாதீர்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : அதே முதலாளிக்குச் சொந்தமான திருநின்றவூரில் இருக்கக் கூடிய இந்தியன் ஸ்டீல் ரோலிங் மில்லிலும் தொழிலாளர்களுக்குள்ள சலுகைகளை மறுக்கும் தன்மையில் 18-2-1969-ல் லாக் அவுட் செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் ஒரு காங்கிரஸ் முதலாளி. அவர்கள் ஒரு பெரிய முதலாளி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தமாதிரி குற்றச்சாட்டு சாட்டக் கூடாது. அதைத் திரும்பப் பெறுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : அந்தத் தொழிலாளர்கள். . . -

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 41-வது விதியின்கீழ் அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை கொடுத்தபின் அந்த அறிக்கையின்மீது ஏதாவது விளக்கம் பெற ஒன்றிரண்டு கேள்விகள் கேட்கலாமே தவிர புதுக் கருத்துக்களைச் சொல்வது, அதன் மீது ஒரு விவாதந்தை உருவாக்குவது இவை யெல்லாம் முறையல்ல. கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கைமீது தெளிவுபெற வேண்டுமானால் அதைப் பொறுத்து இரண்டொரு கேள்விகள் மட்டும் கேட்கலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த முதலாளிக்குச் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் வேண்டுமென்றே மூடப்படக்கூடிய அளவிற்கு, ஒரு தொழிற்சாலையில் லாக் அவுட் செய்து இன்னொன்றில் ஒப்பந்தத்தை மீறியிருக்கிறார்கள். இதற்கு உடனடியாகத் தீர்வு காண அரசு இனிமேலாவது ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது நாகப்பட்டினம் இரும்பு உருக்காலை பற்றியதாகும். இந்த ஒப்பந்தம் முடிவாகி விட்டது. தொழிலாளர்களுக்கு ரூ. 100 குறைந்தபட்சம் போனஸ் கொடுக்க அதிகாரிகளிடம் ஒப்பந்தம் செய்து முடிவாகிவிட்டது. மற்ற விவரங்கள் பற்றித் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.